வருகிறார்கள். அவசியம் ஏற்பட்டால், இன்னும் வெளிநாட்டு நிபுணர்களை வரவழைக்கத் தயங்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மணிமுத்தா நதிப் பாலம்

506 கேள்வி.*—திரு. கி. நாராயணசாமி பிள்ளை:** கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலத்தில் மணிமுத்தா நதி பாலத்திற்கு இரு மருங்கிலும் நடைபாதை (foot bridge) அமைக்க திட்டமுண்டா?

கனம் திரு. வெ. ராமையா: பாலத்தில் இருமருங்கிலும் நடைபாதை அமைக்கும் திட்டம் எதுவும் தற்பொழுது இல்லை.

வைகை கால்வாயை நவீனமாக்குதல்

512 கேள்வி*—திரு. கரு. சீமைச்சாமி:** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வைகை கால்வாயை நவீனமாக்குவதற்கான திட்டம் ஏதேனுமுண்டா?

(இ) ஆமெனில், வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

கனம் திரு. வெ. ராமையா: (அ) & (இ) கனம் அங்கத்தினர் கேட்ட 219-ம் எண் கேள்விக்கு 18—11—1963-ல் சட்ட சபையில் அளிக்கப்பட்ட பதிலைப் பார்க்கும்படி அவரைக் கேட்டுக் கொள்கிறேன். வைகைக் கால்வாய்களைப் புதுப்பிக்கும் புதிய திட்டங்களை பாசனத் தலைமை என்ஜினியர் மேலும் பரிசீலனை செய்து வருகிறார். இத்திட்டம் கூடிய விரைவில் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி: சார், இது கடந்த இரண்டு ஆண்டு காலமாக பரிசீலனையில் இருந்து வருகிறது. 1963-ம் வருஷ பட்ஜட்டிலேயே இதற்குப் பணம் ஒதுக்கி இருந்தது; 1964-ல் கூட ஒரு திட்டமும் இல்லை. இந்த துணை மதிப்பீட்டிலாவது இருக்குமோ என்று பார்த்தால், அதுவும் இல்லை. இந்த நெருக்கடியான காலத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லும்போது, இது அவசியம் என்று கருதி விரைவில் இதை ஏற்று நடத்த முயற்சி செய்வார்களா?

கனம் திரு. வெ. ராமையா: இந்த திட்டத்தைக் குறித்து மிக அதிகமான கவனமும் கருத்தும் அரசாங்கம் செலுத்தி வருகிறது. காரணம் இந்த திட்டம் அமையும்போது அந்த வட்டாரத்தின் நீர்ப்பாசன தேவை பூர்த்தி ஆக வேண்டும். இது ஒரு சரிபடுத்தும் திட்டம். முதலில் இதைக் கொஞ்சம் செலவில் செய்தால் போதும் என்று நினைத்தார்கள், பின்னால் வைகை அணை வந்ததின் காரணமாக ஏற்பட்ட புது மாறுதலுக்குப் பிறகு இந்தச் சீர் செய்யும் திட்டம் மிக்க லாபகரமாக அமையவேண்டும்